டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

அக்ரி-டாக்டர்
மின்னிதழில் குறைந்த செலவில்
விளம்பரம்
செய்து பயன்பெற
தொடர்புக்கு
80563 05483 • 93602 23193

agridoctor.in | 17.7.2024 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 026 - Madurai | Online Edition

# முக்கிய சந்தைகளில் பருப்பு விலை 4% குறைந்துள்ளது

## மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறைச் செயலாளர் தகவல்

புது தில்லி, ஜூலை 16

பருப்பு விலை நிலவரம் குறித்து, மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை, இந்திய சில்லறை வியாபாரிகள் சங்கத்தினருடன் புதுதில்லியில் நேற்று ஆலோசனை நடத்தியது. குறிப்பிட்ட வகை உணவுப் பொருட்களுக்கான உரிமத் தேவைகள், இருப்பு அளவு மற்றும் பொருட்களை எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகளை அகற்றுவது குறித்த, 21.6.24 மற்றும் 11.7.24 தேதியிட்ட உத்தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள துவரம் பருப்பு மற்றும் கொண்டக்கடலை இருப்பு அளவுகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறைச் செயலாளர் நிதி கரே, கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பேசிய நிதி கரே, கடந்த ஒரு மாதத்தில் நாட்டில் உள்ள முக்கிய சந்தைகளில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் கொண்டக்கடலை விலை 4% குறைந்துள்ள போதிலும், இந்த விலைக் குறைப்பு சில்லறை விற்பனை விலையில் மாற்றம் இல்லாமல் இருப்பதை சுட்டிக்காட்டினார். மொத்த விற்பனை சந்தைகளின் விலைக்கும், சில்லறை விற்பனை விலைக்கும் இடையே மாறுபட்ட நிலவரம் காணப்படுவது, சில்லறை வியாபாரிகள் அதிக விலைக்கு விற்பனை செய்வதையே எடுத்துக் காட்டுவதாகவும் குறிப்பிட்டார்.

காரீப் பருவ பருப்பு சாகுபடி பெருமளவு மேற்கொள்ளப்பட்டிருப் பதை சுட்டிக்காட்டிய அவர், அதிகளவில் பருப்பு உற்பத்தி செய் யும் முக்கிய மாநிலங்களில் துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு உற்பத்தியை அதிகரிக்கத் தேவையான பல்வேறு முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

குறிப்பாக நாஃபெட் மற்றும் என்சிசிஎஃப் நிறுவனங்கள் வாயிலாக தரமான விதைகள் விநியோகிக்கப்படுவதாகவும், மற்ற தேவைகள் குறித்து மாநில வேளாண்மை துறைகளுடன் தொடர்ந்து, தொடர்பில் இருந்து வருவதாகவும் நிதி கரே கூறினார்.

எனவே, தற்போதைய விலை நிலவரம் மற்றும் காரீப் சாகுபடியை எதிர்நோக்கி, நுகர்வோருக்கு குறைந்த விலையில் பருப்பு வகைகளை வழங்குவதென்ற மத்திய அரசின் முயற்சிகளுக்கு சில்லறை வியாபாரிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனவும் நிதி கரே கேட்டுக் கொண்டார்.

# எலச்சிபாளையம் வட்டாரத்தில் பசுந்தாள் உர விதைகள் விநியோகம்

நாமக்கல், ஜூலை 16

நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் வட்டாரம் வேளாண்மைத் துறை சார்பில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் பசுந்தாள் உர விதைகள் விநியோகம் அட்மா விவசாயிகள் ஆலோசனைக்குழு தலைவர் தங்கவேல் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயமாலா, வேளாண்மைத் துறை அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் அட்மா குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

எலச்சிபாளையம் பகுதியில் ஒரே பயிரை தொடர்ந்து பயிர் செய்வதாலும் மண்ணில் உள்ள சத்தக்களளை அதிகம் உறிஞ்சும் பயிர்களை பயிரிடுவதாலும் மண்ணின் வளம் குறைந்து விடுகிறது.

அதிகளவில் இரசாய உரங்கள், களைக் கொல்லிகள், பூச்சி கொல்லிகள் பயன்படுத்துவதாலும் மண் வளம் குறைகிறது. இவற்றை தடுக்கும் வகையில் விவசாயிகள் பசுந்தாள் உர விதைகளை பயன்படுத்த வேண்டும். இவற்றின் மூலம் மண்ணில் உள்ள கரிம சத்துக்கள் அதிகரிக்கும் பயிர்களில் கூடுதல் மகசூல் கிடைக்கும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# காரீப் பருவ பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

மதுரை, ஜுலை 16

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு மற்றும் மதுரை மேற்கு வட்டாரத்தில் இயற்கை இடர்பாடுகளால் இழப்பு ஏற்படும் பட்சத்தில் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கவும், அவர்களை விவசாயத்தில் நிலைபெறச் செய்யவும் வேளாண்மைத்துறை மூலம் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு 2024-25ம் ஆண்டு காரீப் பருவத்திற்கு விவசாயிகள் நெல் பயிர் ஒரு ஏக்கருக்கு ரூ.712 பிரிமியத் தொகை செலுத்த வேண்டும்.

விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள பயிர் காலத்தில் வறட்சி, வெள்ளம், புயல், சூறாவளி காற்று, அதிக பரப்பளவில் பூச்சி நோய் தாக்குதல், நிலச்சரிவு மற்றும் இயற்கை சீற்றத்தினால் தீப்பிடித்தல் ஆகிய இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு ஏற்றவாறு பயிர் அறுவடை பரிசோதனை அடிப்படையில் நெல் பயிருக்கு பயிர் காப்பீட்டு தொகையாக ஏக்கருக்கு ரூ.35600/- வழங்கப்படும். நடப்பு காரீப் பருவத்தில் நெல் I பயிருக்கு பயிர் காப்பீடு செய்ய ஜுலை 31ம் தேதி கடைசி நாள் ஆகும்.

வங்கியில் பயிர்க்கடன் பெறும் மற்றும் பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் தங்களது விருப்பத்தின்பேரில் பயிர் காப்பீடு செய்யலாம்.

பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் முன்மொழிவு படிவம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் 1434ம் பசலிக்கான நெல் I அடங்கல், நடப்பில் உள்ள சேமிப்பு வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் நில உரிமை பட்டா ஆகிய ஆவணங்களுடன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், தேசியமயமாக்கப் பட்ட வங்கிகள் மற்றும் பொது சேவை மையங்கள் (இ-சேவை மையங்கள்) மூலமாக உரிய பிரிமியத்தொகை செலுத்தி பயிர் காப்பீடு செய்ய வேண்டுமாறு மதுரை மேற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ப.பாலமுருகன், கேட்டுக் கொள்கிறார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


IFFCO
Wholly owned by Cooperatives
இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனம்
IFFCO
Wholly owned by Cooperatives
பயிர்களில் ஊட்டச்சத்தின் அளவை அதிகரிக்கிறது
சுற்றுச்சூழலுக்கு உகந்தது
குருணை உரங்களை விட விலை குறைவு
உரச்செலவை குறைக்கிறது
பயிரின் தரம் மற்றும் மகசூலை அதிகரிக்கிறது
விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கிறது
IFFCO
पूर्णतः सहकारी स्वामित्व
Wholly owned by Cooperatives
NANO
DAP
Nano Di Ammonium Phosphate
LIQUID (8:16:0)
CROP NUTRITION REDEFINED
Seed Primer | Growth Enhancer | Yield Booster
Less Cost, More Profits
Suitable for all Crops
NANO FERTILISER
FCO Approved
500 ml
விலை ரூ.600/-

# PSG அங்கக சான்றளிப்பு பற்றிய நடைமுறைகள் பயிற்சி



விருதுநகர், ஜூலை 16

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டாரத்தில் 2024-25ஆம் நிதியாண்டு விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்குள் பயிற்சி PSG அங்கக சான்றளிப்பு பற்றிய நடைமுறைகள் என்ற தலைப்பில் உழவர் மையம் அருப்புக் கோட்டையில் வேளாண்மை இணை இயக்குநர் விஜயா தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் அருப்புக்கோட்டை வட்டார விவசாயிகள் 40 நபர்கள் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியில் வேளாண்மை துணை இயக்குநர் நாச்சியார். மாவட்டஆட்சியர் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கலந்து கலந்து கொண்டு சிறப்புறையாற்றினர். வேளாண்மை உதவி இயக்குநர் பத்மாவதி. இயற்கை விவசாயம் மற்றும் உயிர் உரங்கள் உபயோகம் குறித்து எடுத்துரைத்தார். துர்காதேவி. வேளாண்மை அலுவலர், மண்ணுயிர் காத்து மண்ணுயிர் காப்போம் திட்டம் மற்றும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் பற்றி தொழில்நுட்ப உரையாற்றினார். இதில் கோவிலாங்குளம் வேளாண்மை அறிவியல் நிலையம் பேராசிரியர் வேனுதேவன் PSG அங்கக சான்றளிப்பு பற்றிவிரிவாக எடுத்துரைத்தார். மண்பரிசோதனை நிலையம் வேளாண்மை அலுவலர் முருகேசன் அங்கக சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறினார்.

அசோக்குமார் (அங்கக விவசாயி) பஞ்சகாவ்யா, ஜீவாமிர்தம், மீன் அமிலம் பயன்பாடு பற்றி விரிவாக எடுத்துரைத்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் பெருமாள்சாமி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் சதீஸ்குமார் செய்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

# அட்மா திட்டத்தில் கலப்பின மீன்கள் வளர்ப்பு விவசாயிகள் பயிற்சி



திருச்சி, ஜூலை 16

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டாரம், பண்பு அறம் சுற்றி கிராமத்தில் கலப்பின மீன்கள் வளர்ப்பு விவசாயிகள் பயிற்சியில் ஆரோக்கியசாமி மீன் பண்ணை விவசாயி பேசுகையில் மீன்களின் வகைகள் மீன் குட்டை அமைத்தல் மீன்களுக்கு அளிக்கப்படும் தீவன மேலாண்மை பற்றி விரிவாக விளக்கி கூறினார். அதன் பின்பு சபாஸ்டின் செல்வி பேசுகையில் மீன் வளர்ப்பு முறையில் எவ்வாறு லாபகரமாக பயன்படுத்துதல் பற்றி விரிவாக விளக்கி கூறினார். மேலும் தங்கள் மீன் பண்ணையில் செயல்படுத்தப்படும் வழிமுறைகள் பராமரிப்பு முறைகள், மீன் அமிலம் தயார் செய்தல் பற்றி விரிவாக கலந்து கொண்ட விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

வேளாண்மை உதவி அலுவலர் ராமசுந்தரம் பேசுகையில் வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் அனைத்து மானிய திட்டங்களை பற்றி விரிவாக விளக்கி கூறினார். மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தில் தக்கை பூண்டு 50% மானிய விலையில் பெற்றுக் கொள்ள விவசாயிகளுக்கு விரிவாக அழைப்பு விடுத்தார். மேலும் குறுவை நெல் பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் 31.07.24க்குள் பிரிமிய தொகை செலுத்தி பயன் பெறக் கேட்டுக் கொண்டார்.

மேலும் விவசாயிகளுக்கு தார்பாய், சிங்சல்பேட், ஜிப்சம், நுண்ணீர்பாசனம் திட்டம் பற்றி விரிவாக விளக்கி கூறினார். அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரிச்செல்வன் பேசுகையில் அட்மா திட்ட செயல்பாடுகள், செயல்விளக்கம், கண்டுணர்வு சுற்றுலா பற்றி விரிவாக விவசாயிகளுக்கு கூறினார். இதற்கான ஏற்பாட்டினை பண்பரம்சுற்றி மீன் பண்ணை விவசாயி ஆரோக்கியசாமி, ராமலிங்கம், கரிகாலன் முன்னோடி விவசாயிகள், உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் ஆகியோர் செய்து இருந்தனர்.

# விவசாயிகளின் வலைதளம் [Farmers Portal]

● அகில இந்திய அளவில் விவசாயிகளுக்கு வேளாண்மை சம்பந்தப்பட்ட தகவல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் அறியும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

● நமது விவசாயிகளுக்கு விதைகள், உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், கடன் விபரங்கள் அனைத்தும் அத்தியாவாசிய தேவையானதாக இருக்கின்றது.

● மேலும் அவர்கள் வாழும் பகுதிகளுக்குட்பட்ட விபரங்கள் தகவல் களஞ்சியமாக விவசாயிகள் வலைதளத்தில் பதிவேற்றப் பட்டுள்ளது.




● இந்த இணையதளத்தில் இடுபொருட்கள், பயிர் மேலாண்மை, அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பங்கள், வேளாண் இயந்திரங்கள், ஏற்றுமதி இறக்குமதி விபரங்கள், கால்நடை மைய விபரங்கள், கால்நடைகளின் நோய் மற்றும் அதன் அறிகுறிகள், கால்நடைகளின் புள்ளிவிபரங்கள், குளிர்பதன கிடங்குகள், சேமிப்பு நிலையங்கள் விபரம் ஆகியன இடம் பெற்றுள்ளன.

● இத்தளத்தில், விவசாயிகள் தங்களது கிராமம் / தொகுதி / மாவட்டம் அல்லது மாநிலத்தைச் சுற்றியுள்ள வேளாண்மை தொடர்புடைய அனைத்து தகவல்களையும் பெற முடியும்.

● இணையதள முகவரி : http://farmer.gov.inயை பயன் படுத்தி விவசாயிகள் தகவல் பெறலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் இரா.கிரிஜா கூறியுள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மாடித்தோட்டம் அமைத்தல் – ஓர் பார்வை

## மாடித்தோட்டத்தின் முக்கியத்துவம்

● நகர்ப்புற மக்களுக்கு தோட்டம் அமைப்பதற்கான போதிய இடவசதி இல்லாததால் வீட்டின் மாடியில் தோட்டம் அமைக்கலாம்.

● வீட்டிலேயே காய்கறிகளை வளர்ப்பதன் மூலம் இயற்கை முறையில் ஊட்டச்சத்து நிறைந்த காய்கறிகளை பெற முடிகிறது. காய்கறியில் வைட்டமின்கள், தாது உப்புகள், அமினோ அமிலங்கள், நார்ச்சத்துக்கள் நிறைந்து உள்ளது.

● தற்போது ஆடிப்பட்டம் ஆரம்பித்துள்ளதால் உடனடியாக மாடித்தோட்டம் அமைப்பதன் முமூலம் நல்ல பயன் பெறலாம்.

## மாடியில் செடிகள் வளர்ப்பதற்கான வழிமுறைகள்

தொட்டியில் மற்றும் செடி வளர்ப்பு பைகளில் செடிகளை வளர்த்து மாடியில் பல இடங்களில் வைக்கலாம். மாடியில் மண்கலவை அதனுடன் போதியளவு தொழுஉரம் இட்டு அதில் நேரடியாக செடிகளை நடலாம்.

இவ்வாறு செய்யும் போது முதலில் மாடித் தரையை தண்ணீர் உறி மூஞ்சாத பொருள்களினால் அதாவது நீர்க்கசிவை தடுக்கும் பொருள்களினால் மெழுக வேண்டும்.

தேயிலை தூள், முட்டை ஓடு, தேங்காய் நார், காய்கறிகள் வேக வைத்த தண்ணீர் என்று அன்றாடம் சமைக்கும் பொருட்களை வீணாக்காமல் உரமாக போட்டு வந்தால் போதும். செடிகள் செழித்து வளரும். இதற்கென எந்த செலவும் நாம் செய்ய தேவையில்லை. சிறியதாக ஆரம்பிக்கும் இந்த தோட்டம் நாளை மெல்ல மெல்ல விரிவடைந்து உங்களுக்கு ஆர்வத்தை கூட்டும்.

## பந்தல் அமைத்தல்

மாடியில் மேற்கு பக்கம் சுவரின் ஓரமாக ஒரு பந்தல் அமைத்து விட்டால் வசதியாக இருக்கும். ஆனால் மாடியில் பந்தல் கால்களை நடுவதற்கான சாத்தியம் இல்லை. ஆகையால் மாடியில் பந்தல் கால்களை நிறுத்துவதற்கு சில சிறப்பான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். மாடியில் பக்க சுவற்றில் இரண்டு அல்லது மூன்று இரும்பு வளையங்களை ஒன்றன்கீழ் ஒன்றாக 50 செ.மீ. இடைவெளியில் பொருத்தி அதில் மூங்கில்

கம்புகளை சொருகிவிடலாம். இரண்டு பக்க கால்களையும் இணைத்து சரிவான பந்தல் அமைத்துக் கொள்ளலாம். பந்தல்களின் மேல் கொடிகளை ஏற்றிவிடலாம். தென்னங்கீற்று, புல் முதலியவற்றை உபயோகிக்கலாம். இப்பந்தலின் நிழலை நாம் பயன்படுத்துவதோடு அல்லாமல், செடிகளை வெயிலின் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் பயன்படுத்தலாம்.

**மாடியில் வளர்ப்பதற்கேற்ற செடிகள்**

நல்ல வெயிலையும், முழு வெளிச்சத்தையும் தாங்கக்கூடிய செடிகளைத்தான் மாடியில் வளர்க்க வேண்டும். வீட்டிற்கு வெளியே திறந்த வெளியில் வளர்க்கக்கூடிய அனைத்து செடி வகைகளையும் மாடியில் வளர்க்கலாம். ஆனால் மாடியில் குறைந்த அளவே மண் இருப்பதனால் மரங்களையும் பெரிய செடிகளையும் வளர்ப்பது கடினம். மாடிப்பகுதியில் முழு சூரிய ஒளியும் கிடைப்பதனால் வண்ண பூக்களையும், இலைகளையும் கொடுக்கக்கூடிய செடிகளை வளர்க்கலாம். அதனோடு சிறிய மரவகைகளையும் வண்ண பூஞ்செடிகளையும், கொடி வகை களையும் வளர்த்தால் அழகாக இருக்கும். ஒரு மாறுதலாகவும், ஆரோக்கியமான பொழுது போக்காகவும் அமையும்.

**பயிர் சுழற்சி முறை**

ஒரே மாதிரியான காய்கறியை பயிரிடுவதால் செடிகள் வளர்ப்பதற்காக உள்ள ஊடகத்தில் சத்துக்கள் அனைத்தும் போய்விடும். இதை தவிர்ப்பதற்காக பயிர் சுழற்சி முறையை கடைபிடிப்பது அவசியமாகிறது.

**காய்கறி வகைகள்**

வெண்டை, கொத்தவரை, மிளகாய், தக்காளி, கீரை, கத்தரி முள்ளங்கி போன்ற காய்கறிகளை வளர்க்கலாம்.

**பூ வகைகள்**

ரோஜா, நந்தியா வட்டை, செம்பருத்தி, சாமந்தி, மல்லிகை, முல்லை, பென்டாஸ்ரீ;, வெர்பினா, இட்லிப்பூ மற்றும் பல பூஞ்செடிகளை வளர்க்கலாம்.

**மூலிகை வகைகள்**

புதினா, கற்பூரவல்லி, ஆலோவேரா, துளசி, எலுமிச்சை புல், கற்றாழை, தூதுவளை, பிரண்டை போன்ற மூலிகை செடிகளை வளர்க்கலாம்.

## நன்மைகள்

● பசுமையான செடி கொடிகள் கண்களுக்கு விருந்தாக அமைவதோடு மட்டுமல்லாது, மன நிம்மதியையும், மகிழ்ச்சியையும் தருவதோடு அல்லாது சுற்றுச்சூழலை குளிர்ச்சி–யாகவும், தூய்மையாகவும் மாற்ற பயன்படுகிறது. குறைந்த இடம் இருந்தாலும் அதற்கேற்ப மாடித்தோட்டம் அமைத்து பயன் பெறலாம்.

● குடும்பத்திற்கு தேவையான பசுமை நிறைந்த காய்கறிகள், பழங்கள், கீரை வகைகள், பூக்கள் மற்றும் சில மருந்து வகைகளும் வளர்த்து பயன்பெறலாம்.

● காய்கள், பழங்கள் உடனடியாக கிடைக்கும்.

● வீட்டுப்புறத்தை தூய்மையாகவும், அழகாகவும் வைக்க உதவுகிறது.




● பிடித்தமான காய்கள், பழங்கள் கிடைக்க ஏதுவாகிறது.

● வீட்டுப்புறத்தை சுற்றிலும் நல்ல சூழல் அமைகிறது.

● குடும்ப நபர்கள் தோட்ட வேலை செய்வதால் நல்ல உடற்பயிற்சி மட்டுமல்லாது, ஆரோக்கியமான, சுகாதாரமான, இனிமையான, பயனள்ள பொழுதுபோக்காகவும் அமைகிறது. அதுமட்டுமல்லாது தோட்டக்கலை பற்றி அறிய ஏதுவாகிறது.

● வீட்டிலுள்ள சிறுவர்களுக்கு நல்ல பொழுது போக்குடன் கூடிய பாடமாகவும் அமைகிறது.

தோட்டக்கலை துறை மூலமாக மாடித்தோட்டத்திற்கான விதை தொகுப்பு மானித்துடன் வட்டார தோட்டக்கலைத்துறை அலுவலகம் மூலமாக வழங்கப்பட்டு வருதால் இத்தொகுப்பை பெற்று மாடித்தோட்டம் அமைத்து பயனடையுமாறு வேலூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் க.லதா தெரிவித்துள்ளார்.

# பாலிஷ் செய்யப்பட்ட அரிசியை உணவாக உண்பதால் ஏற்படும் அபாயம் தெரியுமா?

இன்றைய தலைமுறையினர் நன்றாக பாலீஷ் செய்யப்பட்ட அரிசியை தேடி உணவாக எவ்வளவு விலை கொடுத்தாவது வாங்கி உட்கொள்ளுவதில் தான் ஆர்வமாக இருக்கின்றனர். நாகரீக வளர்ச்சியின் காரணமாக மனிதனின் வாழ்க்கை முறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்ட நிலையில் உணவில்





தான் அதிகமான மாற்றங்கள் உள்ளன. கடந்த 30 ஆண்டு களாக அசுரத்தனமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

**நம்முடைய முன்னோரின் உணவு பழக்கங்கள்?**

நம்முடைய முன்னோர்கள் மருந்தே உணவாக, உணவே மருந்தாக உட்கொண்டு ஆரோக்கியமாக கடைசி காலம் வரை நோய் நோடியின்றி பிறருடைய துணையின்றி வாழ்ந்தனர். அவர்கள் காலையிலே நீராகாரத்தை பருகி கூழ், களி போன்ற உணவு வகைகளை உணவாக எடுத்தனர். நல்ல நாள் பொல்நாள்களில் மட்டும் அரிசி உணவாக உட்கொண்டு மற்ற நாட்களில் சிறுதானிய உணவுகள் உட்கொண்டனர். அந்த காலகட்டத்திலே அரிசியை பயன்படுத்திய விதம் பல்வேறு நோய்களிலிருந்து காப்பதாக இருந்தது.

**இன்றைய நிலைமை**

இன்று நாம் உட்கொள்ளும் அரிசி அதுவும் பாலீஷ் செய்யப்பட்ட அரிசி மூலமாக பல்வேறு நோய்கள் வருவதாக மருத்துவ வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். 30 வருடத்திற்கு முன்பு சர்க்கரை நோய் (SUGAR DISEASE) என்றால் பணக் காரர்களுக்கு மட்டும் வரும் நோயாக இருந்தது. ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறி ஒரு குடும்பத்தில் பல பேருக்கு இந்த நோய் இருப்பதை காண முடிகிறது. இது நேற்றைக்கு ஆரம்பித்து இன்றைக்கு வந்த நோய் கிடையாது. கடந்த பல வருடங்களாக நம்முடைய உணவு மாற்றங்களால் வந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**அரிசி**

இன்று அரிசி உணவின் பயன்பாடு பெரும்பாலான வீடுகளில் மதியம், இரவு என இருவேளைகளில் உள்ளன. ஆரம்பத்தில் நெல் மூட்டைகளை வாங்கி, அவித்து, கை குத்தல் முறையில் அரிசியாக்கி பயன்படுத்தினர்கள். காலப்போக்கில் ரைஸ்மில்லில் இட்டு அரைத்து, தவிடு தனியாகவும், அரிசி தனியாகவும் கிடைத்தது. தவிடு பிரிக்கப்பட்ட அரிசியில் ஒரு விதமான கோட்டிங்' இருக்கும். இதில் பல்வேறு ஊட்டச் சத்துகள் உள்ளன.

இந்த அரிசியை அப்படியே பயன்படுத்தினால் முழுமையான ஊட்டச்சத்துகள் நமக்கு கிடைக்கும்.

**பாலிஷ் செய்யப்பட்ட அரிசி?**

அரிசியை நல்ல வெள்ளை நிறமாக மாற்றவும் பெரிய அரிசி சிறியதாக மாற்றவும் தற்போது ஒரு முறைக்கு இரண்டு முறை நவீன இயந்திரங்கள் உதவியால் 'பாலிஷ்' (POLISH) செய்ய படுகிறது. இது அதிகபட்சமாக 4 முறை கூட சில இடங்களில் செய்யப்படுகின்றன. சாதாரண அரிசியை ஒப்பிடும் போது, பாலிஷ் செய்யப்பட்ட அரிசியில் ஈரப்பதம், புரோட்டின் தாது, நியோசின் போன்ற உயிர் சத்துகள் குறைவாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பொதுவாகவே நார்சத்து நீக்கப்பட்ட மற்றும் புரதம் இல்லாத உணவு வகைகளை நாம் 'முழுமை யற்ற உணவாக' (INCOMPLETE FOOD) கூறுகிறோம்.




அந்த வகையில் இந்த பாலிஷ் செய்யப்பட்ட அரிசியும் அடங்கும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சர்க்கரை சாப்பிட்டால் எந்த அளவிற்கு சர்க்கரை நோய் அதிகமாகிறதோ, அந்த அளவிற்கு (SUGAR) இணையாக இந்த பாலிஷ் அரிசி உள்ளது எனலாம். பாலிஷ் செய்யப்பட்ட அரிசிகளை அதிக விலை கொடுத்து வாங்கி நாம் உண்பது சொந்த காசில் நமக்கு நாமே சூனியம் வைத்துக் கொண்டதற்கு சமம்.

எனவே கைகுத்தல் அரிசி, கேரளாவில் உண்பது போல மட்டை அரிசி, ஓரளவு பழுப்பு நிற அரிசி போன்றவற்றை வாங்கி உண்போம். நோயற்ற வாழ்வு வாழுவோம். சரியான உணவு வகைகளை தேடி உண்டு ஆரோக்கியமாக வாழுவோம்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# பாழான மண்ணை மீட்கும் அமுத கரைசல்

சேலம் மாவட்டம், நங்கவள்ளி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் து.ரமேஷ் அமுத கரைசல் பற்றி எடுத்துக்கூறுகிறார். பயிர்களின் வளர்ச்சி மற்றும் நல்ல மகசூல் பெற ஒரு ஊக்கியாக செயல்படுகிறது. மிக சிறிய வேலை மூலம் நாம் இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் இந்த கரைசலை உருவாக்க முடியும். இதை நிலவள ஊக்கி என்றும் கூறுகிறார்கள்.

### தேவையான பொருட்கள்

1 லிட்டர் கோமியம், 1 கிலோ சாணம், 10 லிட்டர் நீரில் 250 கிராம் வெல்லம் தேவை.

### தயாரிப்பு

சாணத்தை முற்றிலும் தண்ணீரில் கலக்க வேண்டும். கோமியம் சேர்த்து நன்றாக கலக்கவும். வெல்லத்தை தூளாக்கி மேலே உள்ளவற்றுடன் கலக்கவும், கட்டிகள் இல்லாதவாறு மூடி 24 மணி நேரத்திற்கு வைத்திருக்க வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட கரைசலே அமிர்த கரைசல் ஆகும்.

### பயன்பாடு

இந்த கரைசலைப் பத்து லிட்டர் தண்ணீரில் கலக்கவும் (10 சதவிகிதம்). இந்த கரைசல் நேரடியாக இலைகள் வளர்ச்சிக்கு உதவுகிறது. இது பூச்சிகள் தடுக்கும் தன்மையுடையது. இதை நிலத்தில் தெளித்தால் 24 மணி நேரத்தில் நுண்ணுயிர்கள் பெருகும். பொதுவாக 15 நாட்களுக்கு ஒரு முறை இந்த கரைசலைக் கொடுக்கலாம், பயிர்கள் மிகவும் வாட்டமாக காணப் பட்டால் வாரம் ஒரு முறை கூட தெளிக்கவும். வெல்லத்திற்குப் பதிலாக பழ கழிவுகளைப் பயன்படுத்தலாம்: ஒரு நைலான் பையில் ஒரு கிலோ கழிவுகள் பழம் கட்டி சிறுநீரில் மூழ்கடிக்கவும். ஐந்து நாட்கள் ஊற விட வேண்டும். இது பழம் நொதிக்க உதவுகிறது. இதனுடன் பத்து மடங்கு தண்ணீர் சேர்த்து தெளிப்பு அல்லது ஒரு ஏக்கருக்கு 60-100 லிட்டர் என்ற அளவில் பாசன நீரில் கலந்து அளிக்கலாம். இதனால் பயிர்களின் வளர்ச்சி சீராக இருக்கும் என்று கூறுகிறார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பட்டு வளர்ப்பில் ஊசி ஈ மேலாண்மை



பட்டுப்புழுவைத் தாக்கும் ஊசி ஈ எக்ஸோரிஸ்டா பாம்பிசிஸ் ஒரு வித ஒட்டுண்ணியாகும். வெண்பட்டு உற்பத்தில் 15-20 சதவீத அளவிற்கு இழப்பு ஏற்பட ஊசி ஈ ஒரு முக்கிய காரணமாக உள்ளது.

## தோன்றும் காலம்

ஆண்டு முழுவதும் ஏற்படும். ஆனால் மழைக்காலங்களில் அதிகமான தாக்குதல் ஏற்படும்.

## அறிகுறிகள்

ஊசி ஈ தாக்கப்பட்ட பட்டுப்புழு உடலில் சிறு வட்ட வடில் கருத்தழும்பும். பட்டுக்கூட்டின் முனையில் சிறு துளையும் ஊசி தாக்குதலுக்கான அறிகுறியாகும்.

## முன்னேற்பாடான தவிர்க்கும் முறை

அனைத்து கதவுகள் மற்றும் ஜன்னல்கள் மீது கம்பி வலை / நைலான் வலை பொருத்துதல், தானியங்கி கதவு மற்றும் புழுவளர்ப்பு மனையின் பிரதான நுழைவாயிலுக்கு முன் முகப்பு அறை அமைத்தல்.



## ஊசி கவர்ச்சிப் பொறி

ஊசி பொறியானது ஆண் மற்றும் பெண் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கக் கூடியது ஒவ்வொரு ஊசிபொறி பாக் கெட்டிலும் 12 மாத்திரைகள் இருக்கும் ஒவ்வொரு மாத்திரை யையும் ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து வெள்ளை நிறத் தட்டுகளில் கதவு மற்றும் ஜன்னல் உள்ளே மற்றும் வெளியே 2-3 அடி உயரத்தில் வைக்கவும். இந்த கரைசலை புழுக்கள் மூன்றாம் பருவத்திலிருந்து கூடு கட்டும் வரை வைத்திருக்க லாம். ஊசி ஈயை உயிரின் முறையில் கட்டுப்படுத்த நீசோலிங்க தைமஸ் ஊசி கூட்டுப்புழு ஒட்டுண்ணியை ஒரு இலட்சம் வீதம் விடுவிப்பு செய்து கட்டுப்படுத்தலாம். பட்டுக்கூடு அறுவடைக்கு பிறகு ஒட்டுண்ணிப் பைகளை எருக்குழிகளுக்கு அருகில் மாற்ற வேண்டும்.

### இயற்பியல் முறை

பட்டுப்புழு வளர்ப்பு தாங்கிகளிலிருந்து கழிவுகளை பிளாஸ்டிக் பைகளில் சேகரித்து 15-20 நாட்கள் வைத்து பின்னர் குப்பை குழிகளில் இட்டோ, புதைத்தோ அல்லது எரித்தோ உடனடியாக அழிக்க வேண்டும். ஊசி தாக்கிய பட்டுப்புழுக்கள் மற்றும் ஊசி கூட்டுப்புழுக்களை கண்டுபிடித்து அழித்தல் அவசியம்.

தகவல் : சிவ அனவரதன்.கு.வ., இளங்கலை வேளாண்மை (நான்காம் ஆண்டு). வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளி, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகம், காந்திகிராமம், திண்டுக்கல்.

# ஜி.நடுப்பட்டி கிராமத்தில் விவசாயிகள் பயிற்சி



திண்டுக்கல், ஜூலை 16

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்குள்ளான விவசாயிகள் பயிற்சி ஜி.நடுப்பட்டி கிராமத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு மாவட்ட கவுன்சிலர் சுப்புலெட்சுமி தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் கார்த்தி முன்னிலையில் வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரமோகன் ஆலோசனைப் படி எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி மைய முதுநிலை ஆராய்ச்சியாளர் டாக்டர் செல்வ முகிலன் சிறுதானிய முக்கியத்துவம், சிறிதானிய சாகுபடி அதன் பராமரிப்பு முறை மற்றும் இயற்கை சாகுபடி முறை பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

இப்பபிற்சியில் உதவி வேளாண்மை அலுவலர் சரவணன் வேளாண்மை துறை திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறி விவசாயிகளை ஒருங்கிணைத்து பெரிதும் உதவினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் சுகன்யா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# இப்கோ- முற்றிலும் நீரில் கரையும் உரங்கள்

**யூரியா பாஸ்பேட் (17:44:0)**

யூரியா பாஸ்பேட்டில் 17% தழைச்சத்தும், 44% மணிச்சத்தும் உள்ளது.

**பயன்படுத்தும் முறை**

ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் கலந்து பயிரின் வளர்ச்சி பருவங்களில் (கிளைப்பு/ தூர் விடும் பருவம்) 15 நாட்கள் இடைவெளியில் 1-2 முறை தெளிக்கவும்.

**மோனோ அமோனியம் பாஸ்பேட் (12-61-0)**

மோனோ அமோனியம் பாஸ்பேட்டில் 12% தழைச்சத்தும், 61% மணிச்சத்தும் உள்ளது.

**பயன்படுத்தும் முறை**

ஒரு லிட்டர் நீருக்கு 10-15 கிராம் கலந்து பயிரின் வளர்ச்சி பருவங்களில் (கிளைப்பு/ தூர் விடும் பருவம்) 15 நாட்கள் இடைவெளியில் 1-2 முறை தெளிக்கவும்.

**மோனோ பொட்டாசியம் பாஸ்பேட் (0:52:34)**

மோனோ பொட்டாசியம் பாஸ்பேட்டில் 52% மணிச்சத்தும், 34% சாம்பல்சத்தும் உள்ளது.

**பயன்படுத்தும் முறை**

ஒரு லிட்டர் நீருக்கு 10-15 கிராம் கலந்து பூக்கும் பருவத்திற்கு முன் மற்றும் பூக்கும் பருவத்திற்கு பின் 2-3 முறை தெளிக்கவும்.









**நன்மைகள்**

- அமிலத்தன்மை கொண்ட யூரியா பாஸ்பேட், மணிச்சத்து மற்றும் நுண்ணூட்டச்சத்துகள் கிடைக்கும் தன்மையை அதிகரிக்கும்.
- பயிர்களின் முளைப்பு திறன் மற்றும் வேரின் வளர்ச்சியை அதிகரிக்கிறது.
- பழங்களின் நிறம், தரம் மற்றும் பளபளப்பு தன்மைக்கு உதவுகிறது.
- பூக்கள் உதிர்வதை தடுத்து பயிர்களின் தரம் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும்.
- பூச்சிகள் மற்றும் நோய்களுக்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

- ADVT

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# ஆடி விதைப்பு அருமையான மகசூல்



தமிழில் உள்ள பனிரெண்டு மாதங்களில் ஆடி மாதத்திற் கென்று ஒரு தனிச்சிறப்பு உண்டு. விதை விதைப்பு முதல் அம்மன் திருவிழாக்கள் வரை வெகு விமர்சையாக கொண்டாடப் படும் மாதம் இது. கோடை வெப்பம் தணிந்து பருவமழை ஆரம்பிக்கும் காலம். ஆகவே தான் நம் முன்னோர்கள், ‘ஆடிப்பட்டம் தேடி விதை‘ என்ற பழமொழியைக் கூறிச் சென்றனர். ஆடி மாதம் ஆடிப்பெருக்கு விழா விவசாயிகளால் சிறப்பாக கொண்டாடப்படும். தண்ணீர் வசதியுள்ள விவசாயிகள் அன்று நாற்று விடுதல், விதைப்பு செய்தல் பணிகளை மேற்கொள்வர்.




பெரும்பாலும் ஆடி மாதங்களில் காய்கறி பயிர்களை சாகுபடி செய்வர். மேலும் பருவ மழையை எதிர்பார்த்து சாகுபடி செய்யப்படும் மானாவாரி பயிர்களை விதைப்பு செய்வதற்கும் இம்மாதம் மிகவும் ஏற்றதாகும்.

தரமான விதையைத் தேர்வு செய்து விதை நேர்த்தி செய்து சாகுபடி செய்தால் சரியான பயிர் எண்ணிக்கையை உறுதிசெய்து அதிகம் மகசூல் பெற்று அதிக லாபம் பெறலாம். விவசாயத்திற்கு விதையே ஆதாரம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

விதையின் சுத்தத்தன்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன் இவற்றை நல்ல முறையில் பராமரிப்பதால் மட்டுமே நல்ல மகசூலைப் பெற இயலும்.

எனவே விவசாயிகள் தாங்கள் விதைப்பு செய்ய உள்ள விதையின் தரத்தை அறிய விருதுநகர், விதைப்பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- (மாதிரி ஒன்றுக்கு) மட்டும் செலுத்தி விதை முளைப்புத்திறனை அறிந்து ஆடி மாதத்தில் விதைப்பு செய்து அருமையான லாபம் பெற வேண்டுமாறு விதைப் பரிசோதனை அலுவலர் ம.மகாலெட்சுமி, வேளாண் அலுவலர்கள் இ.ஜானகி மற்றும் சாய்லெட்சுமி சரண்யா ஆகியோர் தெரிவித்துள்ளனர். மேலும் 98944 21833 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு விதைப் பரிசோதனை தொடர்பான சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

# தென்னையில் வெள்ளை ஈ செயல்விளக்கம்



சிவகங்கை, ஜூலை 16

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரம் மாநில விரிவாக்க திட்டங்களுக் கான உறுதுணை சீரமைப்பு திட்டம் (SSEPERS) வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின் கீழ் 2023-24ம் ஆண்டிற்கான செயல் விளக்கம் தென்னையில் வெள்ளை ஈ COCONUT RUGOSE WHITEFLY என்ற தலைப்பில் நெடுவயல் வருவாய் கிராமத்தில் 15.7.24 அன்று துணை வேளாண்மை இயக்குநர் - (அட்மா திட்டம்) சண்முகஜெயந்தி முன்னிலையில் செயல்விளக்கம் அமைத்து காட்டபட்டது. வேளாண்மை உதவி இயக்குநர் அ.அம்சவேணி, துணை வேளாண்மை அலுவலர் பால முருகன், உதவி வேளாண்மை அலுவலர் கார்த்திக்ராஜா ஆகியோர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு தொழில் நுட்பம் பற்றி விரிவாக எடுத்து கூறினார். அட்மா திட்ட அலுவலர் களான வட்டார தொழில்நுட்ப மேலாளர் பெ.ஸ்ரீரங்கசெல்வி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் ம.விஜய் ஆனந்த் செயல்விளக்கம் செய்து காண்பித்து பயன்படுத்தும் முறை பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்கள். செயல்விளக்கத்தின் போது சுமார் 10 விவசாயி களுக்கு மேல் கலந்து கொண்டு தொழில்நுட்ப கருத்துக்களை கேட்டு தெரிந்து கொண்டு பயனடைந்தார்கள்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அயோத்தியாப்பட்டணம் வட்டாரத்தில் மண் புழுக்களை பாதிக்கும் காரணி

1. மண்ணில் கண்ணுக்கு புலப்படக்கூடிய பலவகையான மட்குண்ணிகள் இருந்தாலும் கழிவுப் பொருட்களை மக்க வைப்பதில் மண்புழுக்களே பெரும்பங்கு வகிக்கின்றன.

2. மண்புழு உரத்திலும், அவை வாழும் இடங்களிலும் கரிமச் சத்துக்களின் அளவு அதிகமாக இருப்பதுடன் பல வகையான நன்மை செய்யும் நுண்ணுயிரிகள் வாழ சிறந்த இருப்பிடமாக விளங்குகின்றது.

3. இதனால் மண்ணின் வளத்தை மேம்படுத்துவதுடன் பயிர் விளைச்சலையும் அதிகரித்து நிலைத்த வேளாண்மைக்கு பெரும் பங்கு வகிக்கும் மண் புழுக்களுக்கு, இயற்கையிலும், மண்ணிலும், சாகுபடி முறையிலும் அவற்றைப் பாதிக்கும் காரணிகளும், பல எதிரிகளும் உள்ளன.




4. தட்ப வெப்ப நிலை, மண்ணின் குணங்கள், பயிர்ச் சாகுபடி முறைகள், இரசாயன உரங்கள், ஆலைக்கழிவுகள், காடுகள் அழிப்பு, பூச்சிக்கொல்லிகள், பூஞ்சாணக்கொல்லிகள், களைக் கொல்லிகள் மற்றும் இயற்கை எதிரிகள் ஆகும் அக்காரணி களில் ஒன்று இன்று நாம் அறியவிருப்பது.

## தட்ப வெப்ப நிலை

1. மண்புழுக்களின் வாழ்க்கையை அதிகளவு பாதிப்பது காலநிலை வேறுபாடாகும். உகந்த காலநிலை நிலவும்போது இந்திய மண்ணில் மண்புழுக்களின் எண்ணிக்கை ஒரு சதுர மீட்டருக்கு சுமார் பத்து முதல் நூறு வரையில் இருக்கக்கூடும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

2. ஆனால், அவ்வாறு இல்லாத பொழுது மண்புழுக்கள் குழுக்களாக அவற்றின் இருப்பிடத்தைவிட்டு சென்று விடுகின்றன.

3. வெப்ப மண்டல நாடுகளில் அதிக வெப்பநிலை நிலவும்போது கரிமச்சத்து அதிகமாக சிதைவடைவதால் மண்புழுவின் உணவான இலை மக்கு குறைந்தே காணப்படும்.

4. இதனால் இந்நாடுகளில் மண்ணின் மேற்புறத்தில் வாழக்கூடிய மண் புழுக்களின் எண்ணிக்கை மிக குறைந்து விடும். மேலும் சில வகையான மண்புழுக்கள் அதிக அளவு நீர் தேங்கியுள்ள இடங்களில் இருக்க முடிவதில்லை.

5. மழைக்காலங்களில் அதிகளவு மழை பெய்த பின்னர் வயல் வெளிகளில் மழைநீர் தேங்கியுள்ள இடத்திற்கு அருகில் பார்த்தால் மண்புழுக்கள் மண்ணின் மேற்புறத்தில் ஊர்ந்து சென்று கொண்டு இருப்பதை நாம் காணலாம்.

6. எனவே மண்புழு உரம் தயாரிப்பில் ஈடுபடும் போது படுக்கைகள் 60% ஈரப்பதம் இருக்குமாறு கவனித்துக்கொள்வது சிறந்தது. வின்ரோ முறையில் மண்புழு உரம் தயாரிக்கும் பொழுது அதிக வெயில் மற்றும் மழை காலங்களில் படுக்கையை வைக்கோல் கொண்டு மூடாக்கு செய்து பாதுகாக்கலாம் என சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் த.சரஸ்வதி கேட்டுக் கொண்டுள்ளார்.

# பயறு வகை பயிர் சாகுபடி தொழில்நுட்பம்

### விதை நேர்த்தி

ஒரு 1 கிலோ விதைக்கு 4 கிராம் விதம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது சூடோமோனஸ் புளோரசோசன்ஸ் கிலோவுக்கு 10 கிராம் மருந்தை விதைகளுடன் கலந்து ஒரு நாள் வைத்திருக்க வேண்டும். விதை நேர்த்தி செய்ய பாலித்தீன் பை (அ)பிளாஸ்டிக் வாளியை பயன்படுத்த வேண்டும்.

### உர நிர்வாகம்

மண் பரிசோதனைக்கு ஏற்ப தழை, மணி மற்றும் சாம்பல் சத்து உரங்களை இடுதல் வேண்டும். இல்லையெனில் பொதுப் பரிந்துரையான மானாவாரி N-12.5:P-25:K-O கிலோ/ஹெக்டர்,

பாசனப்பயிர் N-25:P-50:K-O கிலோ/ஹெக்டர் இலைவழி நுண்ணூட்டம் 2% DAP அல்லது 5 கிலோ DAP கரைசலை விசைத்தெளிப்பான் மூலம் இலைவழியாக தெளிக்க வேண்டும்.

**விதைப்பு**

வரிசைக்கு வரிசை 90 செ.மீ, செடிக்குச் செடி 30 செ.மீ என்ற இடைவெளியில் பாலித்தீன் பையில் உள்ள துவரை செடியை விதைக்கப்பட வேண்டும். 15 கிலோ விதை / ஹெக்டர்.

**களைகட்டுப்பாடு**

விதைத்த 15-20ம் நாளில் கலைக்கொத்தி கொண்டு முதல்களை எடுக்க வேண்டும். பின்னர் மண் அனைத்து பார்களை சரிசெய்ய வேண்டும், இதனால் செடிகள் சாயாத தன்மை பெரும்.






**நீர் நிர்வாகம்**

விதைத்த 3-5 நாட்களில் உயிர்நீர் கட்டுதல் வேண்டும். 7 அல்லது 8 முறை நீர்பாசனம் செய்யவேண்டும். நெல் வரப்புகளிலும் கரையோரங்களிலும் துவரை சாகுபடி செய்யப்படுகிறது.

**அறுவடை**

75% காய்கள் முதிர்ந்தவுடன் தரையோடு செடியை வெட்டி களத்தில் உளர்த்தி விதைகளை தட்டி எடுக்கப்படுகின்றன. பிரித்து எடுக்கப்படும் துவரை மேலும் நன்றாக உலர்த்தி சேமித்து வைக்கப்படுகிறது என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வேளாண்மை உதவி இயக்குநர் வேலு தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# அங்கக இடுபொருட்கள் தயாரிப்பு குறித்து பயிற்சி

திருச்சி, ஜூலை 16

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டாரம் வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமையின் மூலம் பிச்சாண்டார்கோயில் அங்கக இடுபொருட்கள் தயாரிப்பு குறித்து பயிற்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வட்டார தொழில் நுட்ப மேலாளர் அபிராமி வரவேற்புரை ஆற்றினார். மண்ணச்சநல்லூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) பரமசிவம் தலைமை வகித்து திட்ட விளக்க உரை ஆற்றினார். மேலும் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் விதை இருப்பு மற்றும் விதைப்பு முறைகளை பற்றி எடுத்துக் கூறினார்.




முன்னோடி விவசாயி லோகநாதன் பஞ்சகாவியா, மீன் அமில கரைசல், தேமோர் கரைசல், பூச்சி விரட்டி, பழக் கரைசல் தயாரிப்பு குறித்தும் அதை பயன்படுத்தும் முறைகள் குறித்தும் உரை ஆற்றினார். குறுவை சாகுபடி முறைகள் குறித்து துணை வேளாண்மை அலுவலர் சின்னபாண்டி எடுத்துக் கூறினார்.

மண்ணச்சநல்லூர் வேளாண்மை உதவி அலுவலர் பார்த்திபன் நடப்பு பருவத்திற்கு விற்பனைக்கு தயார் நிலையில் உள்ள விதைகள், நுண்ணூட்டச் சத்து கலவைகள் மற்றும் அதன் மானியங்கள் குறித்து உரை ஆற்றினார். இயற்கை விவசாயி ஸ்டீபன் கென்னடி அங்கக வேளாண்மை குறித்தும் பாரம்பரிய நெல் ரகங்கள் குறித்தும் உரை ஆற்றினார்.

இறுதியில் உதவி தொழில் நுட்ப மேலாளர் சிந்தியா நன்றி உரை கூறினார்.